Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆ (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஅ] யாழ்ப்பாணம்:- துன்முகிஹு கார்த்திகைமீ உகஉ வெள்ளிக்கிழமை (14 DEC 1956) [இல-நரு]

அரசியல் அலை

# இலங்கைப் பிரதமர் எண்ணியதையே — அமெரிக்க சனுதிபதி நினைத்தாராம்!

———=o=———

## அரசியல் வான்கோழி நாடகம் அரங்கேறியதா..................?

———:0:———

ஆசிரியர் சொல்வதைக் கேட்டுமாணக்கன்மனனம்பண்ணி மறுமுறை சொல்வான். சொல்லிவிட்டு ஆசிரியருடன் சம அறிவு உரிமை சொல்லும் மாணக்கர்களுமுண்டு. அரசியல்உலகில் நேருவைப் போலத் தங்களை நினைத்துக்கொள்ளும் பிரதமர்கள் பலர்; அமெரிக்க சனுதிபதியைப்போலப் பாவனை செய்பவர் பலர். **"கான மயில்" ஆட்டத்திற் கருத்தழிந்த வான்கோழி**க்கான மனப்பான்மை அரசியலில் அதுவும் பிரதமர்களுக்குள் இருப்பது வியப்பாகின்றது!

ஐக்கிய நாடுகள் அமைப்பில் இலங்கைக்கு விசேட வரவேற்பு நிகழ்ந்ததாகத் தான் கருதுவதாகப் பிரதமர் பண்டாரநாயக பறை சாற்றுகின்றார். விசேட வரவேற்பு எதற்காக? இலங்கையிலே வகுப்பு வாதத்தை மீண்டும் வளரச் செய்த வீரத்துக்காகவா? ஒருஇனத்தை ஒடுக்கி இன்னொரு இனத்தைச் சர்வாதிகார பீடத்திலிருத்துவதற்கு வழிவகைகள் தேடி வைத்ததுக்காகவா? ஒரு மொழியைப் புறக்கணித்து இன்னொரு மொழியை அரியாசனம் ஏற்றச் சட்டம் வகுத்ததற்காகவா?

அன்றி இலங்கையில் மக்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்து நல்லவண்ணம் வாழுவதற்கு ம. ஐ. மு. அரசாங்கத்தின்கீழ் அகவிலையேற்றம் வேலையில்லாத் திண்டாட்டம் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம் மலிந்து விளங்குவதற்காகவா?

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# சிவ கைங்கரியமே சிந்தையிற்கொண்டு சிவனை நம்பியே சிவ தொண்டாற்றினர்

## வாழ்க்கை முழுதும் சேவைக்கர்ப்பணஞ் செய்த நாவலர்

———0-0———

முற்றொடர்

### சமயத் தொண்டு

நாவலர் அவர்கள் கிறீஸ்தவர்கள் செய்யும் கண்டனங்களுக்கு விடையாகவும், அவர்கள், தம் கிறீஸ்த சமயத்திற் சேர்ப்பதற்காக சைவசமயத்தை இழித்துக் கூறுவதைப் பொறுக்க முடியாதும், சைவசமயமே மெய்ச்சமயமென்னும்உண்மையைத் தர்க்க ரீதியான முறையில் எழுதி "சைவ தூஷண பரிகாரம்" என்னும் நூலாக வெளியிட்டார். அதில் அவர் கூறியிருக்கும் ஒருபகுதி பின் வருகின்றது.

"அநாதிபகவனுகிய பரமசிவன் அருளிச் செய்த வேதாகமங்களால் உணர்த்தப்படும் சைவசமயமே சற்சமயமாம். இச் சற்சமயம் வழங்கும் நமது ஆரிய கண்டத்திலே மிலேச்சர்களாகிய பாதிரிகள் புகுந்து இச் சைவத்தை விளக்கும் சிவ சாஸ்திரங்களைச் சிறிதும் அறியாமையினுலும் தாங்கள் முன்னே தழுவிக்கொண்ட துர்ச்சமயமாகிய கிறிஸ்து மதத்தின் மேல் வைத்த துரபிமானத்

ஆசிரியர் திரு. சி சிவரத்தினம்

நாவலர் வித்தியாசாலை

தினுலும் அப்புன் மதத்தைப் பிரசாரித்தலே தங்களுக்கு எளிதிற் பொருள் வரும் வழியாய் இருத்தலானும் சைவ சமயத்தைக் குருட்டு வழிகளால் அநியாயமாகவே தூஷிக்கின்ருர்கள். நமது சிவ சாஸ்திரங்களைச் சிறிதும் அறியாதவர்களும் தருக்க நூலிலே அற்பமேனும் பயிலாதவர்களுமாகிய சிலசனங்கள் அத் தூஷணைகள் ஒக்குமென மதி மயங்கி இருக்கின்றனரே"

நமது தமிழ் நாட்டினருக்கு உபயோகமாகும் பொருட்டு சமய குரவர் நால்வராலும் வேதங்களின் அர்த்தங்களை அநுசரித்து அருளிச் செய்யப்பட்ட தேவாரம்,திருவாசகம் என்னும் திராவிட வேதங்களும் மெய்கண்ட தேவர் முதலிய சிவாநுபூதிமான்களால் ஆகமங்களின்அர்த்தத்தை அநுசரித்து அருளிச்செய்யப்பட்ட சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய திராவிட சித்தாந்தங்களும் உளவாம்.

இந் நூல்கள் எல்லாவற்றுலும் உணர்த்தப்படும் சைவ சமயமே சற்சமய இலட்சணங்களெல்லாம் குறைவற அமைந்த சத்திய சமயமென்று சுருதி, யுத்தி அநுபூதிகளாலே நிச்சயித்து ஆதிகாலந்தொடங்கிப் பரத கண்டத்திலுள்ள நமது முன்னோர்களாகிய சகல மகான்களும் அதனையே அங்கீகரித்துக் கொண்டு வந்தனர். அதனையே நாம் எல்லோரும் அங்கீகரிக்கின்றோம். ஆகையினுலே நம் சற்சமயமாகிய சைவ சமயத்தைப் பரப்பவேண்டியது சைவ சமய மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகுமெனவும் தாம் வெளியிட்ட நூல்களிற் கூறியுள்ளார்.

புலவர் உள்ளம் சைவப் பிரசாரத்திலே பதிந்து போனது வீட்டாருக்குஅவ்வளவு பிடிக்கவில்லை. போக்கு ஒரு மாதிரியிருக்கின்றதே. ஒருகால் கட்டுக் கட்டிக் குடும்பச் சக்கரத்தில் சிக்கவைத்தால், இவர் அடங்கிப்போவார், என்று நினைத்தனர். வாலிபக்காளை; நல்ல அறிவாளி; செயலாளி; இவருக்குப் பெண் கொடுக்க அநேகர் முன்வந்தனர். "நம் ஆறுமுகம் குழந்தை குட்டிகளுடன் வாழ வேண்டும்" என்று உறவினரின் அன்புள்ளம் துடித்தது இதனை அவருக்குத் தெரிவித்தார்கள். இந்த ஒரு பேச்சு மட்டும் என்னிடம் பேச வேண்டாம் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். ஆறுமுகனர் ஆயுள் முழுதும் முறையான பிரமசரியம் காத்தார். கனவில்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# வாழ்க்கையின் நோக்கம்

## அடைதற்குச் சிறந்த வழி

ஒருவருடைய உள்ளம் தூய்மையடைந்து அருளுணர்ச்சி உண்டாகும்பொழுது அவருடைய உடலின் உச்சி தொடக்கம் உள்ளங்கால் வரையும் இறைவனது அருளொளி பிரதிபலிக்கின்றது. அத்தகைய அருட்பேற்றைப் பெற்றவர் உண்மையாகவே இறைவனது ஒளி வடிவின் தோற்றமாகின்ருர். அவரிடமிருந்து வெளியே செல்லும் அருட் கிரணமானது சந்திர கிரணம் போன்று குளிர்மையாயிருக்கின்றது; மனம் துன்புற்று அவரை அடையும் உயிர்கள் சுகம் பெற்று இன்புறுகின்றன.

இப்படியான மேலான ஒளியையும் இன்பத்தையும் ஒருவர் எப்படி அடைகின்ருர்? ஒரே ஒரு வழிதான் உள்ளது. அது அகங்கார மமகாரமென்பது ஒரு சிறிதுமில்லாமல் ஒருவர் தம்மைத் தாமே இறைவனிடம் ஒப்படைத்தலாகும்; இப்படிச் செய்வதாலேயே அருட்சக்தியும் அருட் சிறப்பும் மக்கட் பிறவி எடுத்த ஒருவரில் வெளிப்படுத்தப் படுகின்றன.

இவ் வுண்மையை ஒருவர் உணரும் பொழுது அவருடைய உள்ளம் உண்மையாகவே இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலாகின்றது. ஒருவருடைய மதியில் அருள்படியும் பொழுது அவருக்குள் மறைந்து கிடக்கும் சக்தியும் சிறப்பும் வெளியாகின்றன; அப்பொழுது அவருடைய உள்ளம் அருள் வழிப்பட்டு நிற்க அவருடைய தேகம் அருட்சக்தியை வெளிப்படுத்தி இறை வழித்தாகின்றது. அப்படிப்பட்ட ஒருவர் உலகில் வெளிப்படுத்தும் அருட்சக்தி அதிசயமானதாயிருக்கின்றது.

கடவுள் இன்பமயமாயும் ஞானமயமாயுமிருந்து உலகம் முழுவதையும் ஆளுகின்ருர். அவர் ஞானிகளின் உள்ளங்களி லிருப்பதுபோல் எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலு மிருக்கின்ருர். இவ் வுண்மையை உணர்தலே வாழ்க்கையின் தனி நோக்கமாகும்.

கடவுளே உண்மை. அவர் எங்களுடைய நெருங்கிய நண்

# கிழக்கு எழுச்சிபற்றி தீர்க்கதரிசனம்

உலகில் இன்று அடிமைத் தளையாற் பந்திக்கப்பட்டுச் சேவைசெய்து நிற்கும் மக்கள் (சூத்திரர்) எதிர்காலத்தில் அத்தளையை அறுத்து எழுந்து நின்று மேலோங்கி

வளர்வார்கள். அஃதே சிவம் என்னும் ஊக்கச் சக்தியின் ஒழுங்காகும். ஒரு புதிய உலகத்தை உருவாக்கும் பொருட்டு உலகின் கிழக்கு நாடுகள் எல்லாம் ஒன்றாக எழுந்து நிற்குமென்பது வெள்ளிடைமலை போல தெள்ளிதாய்ப் புலப்படுகின்றது. இதோ சீனவின் எதிர்காலப் பெருமை தோன்றுகிறது. ஏனைய எல்லா ஆசிய நாடுகளும் அதைத்தொடர்ந்து பெருமையடையும் வானத்திலேயுள்ள நட்சத்திரங்கள் அசைந்து செல்வதை வானசாஸ்திரிகள் தூரதிருஷ்டிக் கண்ணாடிமூலம் எப்படிப் பார்க்கிருர்களோ அப்படியே உலக நாடுகளின் வளர்ச்சியை நான் காணக்கூடியதாயிருக்கின்றது. அடிமைப்பட்டிருக்கும் இம்மக்களின் எழுச்சி உருசியாவிலே தொடங்கும். பின்பு சீனவிலே பரவும். அதைத் தொடர்ந்து இந்தியா எழுந்து, எதிர்கால உலகத்தை அமைப்பதில் மிக முக்கியமான நிலைமையை வகிக்கும். இவ்வெழுச்சி உண்மையாகவே நிகழுமென்று உறுதியாகச் சொல்லுகிறேன்.

— சுவாமி விவேகானந்தா

...பன். சாதனை மூலம் அவருடன் இடையருது ஐக்கியப் படுவதால் நாம் அவருடன் ஒன்ருயிருக்குந் தன்மையை உணருகினேரும். அவரிலிருந்து புறம்பானவர்களாக நினைத்து நாங்கள் சாதனை செய்யத் தொடங்குகின்ரேம். ஆனல் அவருக்கும் எமக்குமிடையில் உண்டாகும் கலப்பால் இரண்டாயிருக்கும் தன்மை சிறிதுமின்றி ஈற்றில் ஒன்ருகி அவரேயாய் நிற்கின்ரேம.

நாம் எம்மைக் கடவுளிலிருந்து வேருக நினைத்து வாழும் வரையில், எங்கள் வாழ்க்கையானது எல்லா விதமான இடைஞ்சல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் சலனங்களுக்கும் இடமாயிருக்கின்றது. ஆனல் இந்த அஞ்ஞானம் நீங்கி, உயிரானது தனக்கு இயல்பாயமைந்த

தொடர்ச்சி 5-ம் பக்கம்

### எங்கள் அறிவித்தல்

சைவப்பிரகாச யந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் நிகழும் மார்கழி 5-ந் திகதி புதன்கிழமை (19-12-56) திருவாதிரைத் திருநாளின் பொருட்டு மூடப்பட்டிருக்குமென்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அதிபர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


## இந்துசாதனம்

யாழ் துர்முகி ஹூ கார்த்திகை மீ உகவ வெள்ளிக்கிழமை


## தமிழ்மொழி விரோதி தகநாயக மந்திரியார்

கல்வி அமைச்சுக்காகாலிப் பாராளுமன்ற அங்கத்தவரைக் கவனமாகத் தெரிந்து எடுத்தார் திரு. பண்டாரநாயக? செல்வத்துட் செல்வம் கல்விக் கருந்தனம் என்ற பண்பாட்டுக்குப் பொருத்தமாக ஒரு அறிஞரை மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலிற்பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையை நினைக்கும் பொழுது அமைச்சு நடத்தும் ஆற்றல் பண்டாரநாயக அரசாங்கத்துக்கு இல்லையென்ற உண்மை வெள்ளிடைமலைபோல விளங்குகின்றது. வெண்டாமரை மீது வெள்ளன்னம் வீற்றிருப்பதே இயற்கை வனப்பு. ஆங்கு புன்காகம் அமர்ந்திருந்தால் அந்நிகழ்ச்சி இயற்கைக்கு மாறானதொன்றென்று யார்தான் எள்ளி நகையாடமாட்டார்கள்?

ஈழத்துக் கல்வித்துறைக்கு இவ்வளவு விரைவில் இழுக்கு நிகழ்ந்துவிடும் என்று யாரும் எண்ணியிருக்கமாட்டார். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பாரம்பரியமான கல்வி முறையிலே பல மொழிகளும் நிலைபெற்று நெறிப்படி வளர்க்கப்பட்டு வந்த ஒழுக்கத்தை இழுக்குடையதாக்கும் ஒருவர் அமைச்சர் அவையில் அமர்ந்திருக்கும் விபரீதம் சால்பு வளம் சாலச்சிறந்த இலங்கையிலா தோற்றுதல் வேண்டும்?

தோலிருக்கச் சுளைபறிக்கும் அரசதந்திர நிபுணர் என்று இறுமாப்புக்கொண்ட கல்வி மந்திரியார் தமிழ் மொழிக்குப் பரம விரோதியாயிருக்கின்றார் என்று தமிழகம் உணர்ந்திருக்கின்றதென்பதை அன்னார் உணர்ந்துகொள்ளும் ஆற்றல் இல்லாதவராயிருப்பது வியப்பாகின்றது. தமிழ் பேசும்மக்களுக்கிடையிலே இசுலாமியர் தமிழர்கள் என்ற பேதத்தை உண்டுபண்ணிவிடுவதையும் மதத்துக்கும்மதத்துக்கும் வேற்றுமையைத் தோற்றுவிப்பதையும் பிரித்தாளும்தந்திர வழியாகக் கொண்டு பல வேறு விபரீதத்திட்டங்களை புகுத்தும் திரு. தகநாயக தமிழகத்துக்கு மட்டுமன்று தாயகத்துக்கு மாத்திரமன்று கல்வியுலகத்துக்கே பழிகாரனுகிப் பெரும்விரோதியாகின்றார்.

ஆசிரிய கலாசாலைகளுக்குப் புகும் ஆசிரிய பயிற்சி மாணாக்கர்களைத் தெரிந்தெடுக்கும் விதி முறையை மனம்போன்வாறு மாற்றியமைக்கத் திட்டமிட்டிருக்கும் கல்வி மந்திரியார் மொழிப் போராட்டத்தை நேரடியாகத் தொடக்கி வைப்பதற்கு வித்திடுகின்றார் என்றே நாம் கருதுகின்றோம்.

—

### இராமநாதவள்ளலை எண்ணி ஆறுதல் அடைவோம்

ஈழம், இந்நாட்டில் இருக்கும் அனைவருக்கும், இயற்கை உரிமையாய் உள்ளதென்ற உண்மையை நாற்பதாண்டுகளுக்கு முன் அரசியல் மந்திரமாகச் சட்ட நிருபண சபையில் நின்று சிங்கநாதஞ்செய்த வீரன் இராமநாதன் விளங்கிய இலங்கையிலா இன்று சாதி சமயம் மொழி இனம் என்ற விபரீத வேறுமை எண்ணம் ஆட்சிபுரிகின்றதென்பதை எண்ணுமிடத்து இத்தேச மக்களின் நிலைமை எவ்வளவு கவலைக்கிடமானதாக மாறிவிட்டதெனப் புலப்படுகின்றது

இலங்கையர்கள் யாவருக்கும் ஏகப் பிரதிநிதியாக இருந்த பெருமை இராமநாத வள்ளல் ஒருவருக்கே யுரியதென்றால் இந்த உத்தம பரோபகாரியின் குணாதிசயங்கள் எத்தகையன என்பது விளங்கும் ஒரு மொழி ஒரு மதம் ஒரு இனம் என்ற வெறி மயக்கம் இந்நாட்டுத் தலைவர்களைத் தாக்கிவிடுவதற்கான அறிகுறிகளை அக்காலத்திலேயே இராமநாதன் அவர்கள் அவதானித்து ஆணித்தரமாக எச்சரிக்கை செய்தேதிர்த்தார்கள். ஆனால் காலன் குறுக்கிட்டான், ஈழத்தின் சோலமும் மாற்றமடையத் தொடங்கியது. காலம் கழிந்துவர நிலைமை மோசமாகிவிட்டது. நேர்மைத் திறம் படைத்த நெஞ்சுவலி அமைந்த வீர புருடர்கள் இராமநாத அவதாரமாகத் தோன்றினாலன்றி, இந்நாடு விமோசனம் எய்தமாட்டாது என்பது உண்மை. இப்பொழுதாவது இராமநாத நெறியைப் பின்பற்றி ஈடேற்றத்துக்குழைக்கமாட்டார்களா இந்நாட்டின் தலைவர்கள்?

— —

### தமிழ் ஆசிரியர் பயிற்சி

அரசாங்க தமிழ் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்றப்படும் ஆசிரியர் தொகை குறைக்கப்படுமாம். அந்த அளவுக்குச் சிங்கள ஆசிரியர் தொகை கூட்டப்படும். தமிழ் ஆசிரியர் தொகை தேவைக்குக் கூடவிருப்பதும் சிங்கள ஆசிரியர்தொகை தேவைக்குக் குறைவாயிருப்பதும் காரணமாகக் கூறப்பட்டுள்ளது.

## வாழ்க்கை வானில் — வளர்பிறை

### வைத்தியர்களுக்கு மாற்று மருந்து

ம. ஐ. மு. இலங்கை மக்களின் சகல வியாதிகளுக்கும் மருந்து கொடுக்கும் பரம வைத்தியராக விளங்கும் என்று தேர்தற் காலத்திற் கூறியதுண்டு. மருந்துதவும் வைத்தியர்கள் எல்லோரும நோயை மாற்றும் தத்துவம் படைத்தவர்களல்லர். சில வேளைகளில் மருந்தினால் நோய் முற்றி வினையாய் முடிவதுண்டு. இந்த விதமாகவே 'ஆட்கொல்லிமருத்துவராக' விளங்குகின்றது ம. ஐ. மு. இந்நாட்டின் நல்லன மறைந்து அல்லது விளைவதற்குரிய வைத்தியரான ம. ஐ. மு. இப்பொழுது இயற்கை நோய் வைத்தியர்களையே இல்லாமற் செய்வதற்குத் திட்டமிட்டிருக்கின்றதாம்.

### வெளியிலிருந்து உதவி வேண்டுகின்றனர்

இலங்கை அரசாங்க வைத்தியர்கள் வேலைநிறுத்தஞ் செய்தால் வெளியூர் வைத்தியர்களை வரவழைக்கவும் வேலைநிறுத்தஞ் செய்யும் வைத்தியர்கள் அத்தனை பேரையும் உத்தியோகத்தினின்றும் விலக்கும் நோக்கமாகக் குற்றஞ் சாட்டவும் யோசனைகள் நடைபெறுகின்றனவாம்.

### நோயும் வேலை நிறுத்தஞ் செய்தால்!

இலங்கை அரசாங்க வைத்தியர்களுக்கு அநுதாபமாக நோயும் வேலைநிறுத்தஞ் செய்துவிடுமோ என்று வைத்தியப்பகுதி மந்திரியார் சித்தந் தடுமாறுகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது. வைத்தியப் பகுதி அத்தியாவசிய சேவைப் பகுதியாக அரசாங்கத்தாரால் கட்டளையிடப்பட்டால் அந்தச் சட்டத்தை வைத்தியர்கள் அணி அணியாக எதிர்ப்பார்கள் என்றும் தெரியவருகிறது. இப்பொழுது அத்தியாவசியமாய் வேண்டப்படுவது பண்டாரநாயக அரசாங்கத்துக்கு நல்ல வைத்தியஞ் செய்யத்தக்க வசதி உண்டுபண்ணுவதே

○

விஞ்ஞானப் பயிற்சிக்காக விசேட சன்மான வசதிகள் அளிப்பதிலேவகுப்புவாத விபரீதத்தைப்புகுத்தியிருக்கும் கல்வி மந்திரியார் தமிழ்பேசும் பெற்றோர்கள் மீது பெரும் பரிவு கொண்டு அவர்களுக்குக் கற்றோபோலக் கசிந்துருகுகின்றார். தாய்மொழி யல்லாத மொழியிலே கல்வி கற்பதற்குக் கல்விச் சட்டத்தை மாற்றியமைக்க முன்வந்திருக்கும் அமைச்சர்கூறும் நியாயங்களை நோக்குமிடத்து அவற்றைக் கேட்பவர்கள் அறிவிலிகள் என்ற எண்ணம் திரு. தகநாயகவுக்குண்டென நினைக்க வேண்டியிருக்கின்றது.

போர் முறையிலும் நேர்மை ஒன்றுண்டு. விரோதிக்கு வீரம் இருத்தல் வேண்டும். அவ்வாறின்றித் தமிழ் பேசும் மக்களுக்காகவே தமிழ்மொழியை அழித்துவிட முன்வந்திருக்கின்றேன் என்று கல்வி மந்திரியார் தமது செயல்களுக்கு விளக்கங் கூறுவது பேடித்தனமாகும், பெருந்தன்மையாகாது என்று அழுத்தந் திருத்தமாக எடுத்துக்காட்டுகின்றோம். இந்த விளக்கத்தினாலே தமிழினம் தலைசாய்ந்து அடிபணியும் என்ற எண்ணத்தை மட்டும் திரு தகநாயக வைத்துக்கொள்ளுதல் கூடாது.


### தேவை

—0—

தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுத்துக்கோத்தலில் பூரண அறிவுள்ள அனுபவம் வாய்ந்த தலைமைக் கோவை அலுவலர். (FOREMAN — COMPOSITOR).

அச்சுத் தொழில் நுட்ப அறிவு, சிலிண்டர் (CYLINDER) யந்திரங்கள் அல்லது திரெடில் (TREADLE) யந்திரங்கள் கையாளுதல் கூடுதலான தகுதியாகும்.

வண்ணார்பண்ணை இந்துசாதன (HINDN ORGAN) அதிபருக்கு 17-12-56 முடிய முன் விண்ணப்பம் செய்க.


## மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் விழாச்சபையின் ஆதரவில் மணிவாசகர் விழா மார்கழி முதலாந்திகதி சனிக்கிழமை (15-12-56) தொடக்கம் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு காரைநகர்ச் சிவன்கோவில் மண்டபத்தில் நடைபெறும். விழா ஆரம்பத்திலன்று மடத்துக்கரை அம்மன் கோவிலிலிருந்து திருவாசகத் திருமுறை ஊர்வலமாக மேளவாத்திய சகிதம் விழா மண்டபத்திற்கு இடபத்திற் கொண்டுசெல்லப்படும்.

தருமபுர ஆதீன வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் விழாவை ஆரம்பித்து வைப்பார்கள். மதுரை திருவாவடுதுறை ஆதீன வித்துவான் பெருஞ்சொற்சிங்கம், சித்தாந்தசிகாமணி உயர்திரு வீர. சிவசுப்பிரமணியம், ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு வே. அ. கந்தையா, பலாலி அரசினர் ஆசிரிய கல்லூரிப் பேராசிரியர் பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளை, மானிப்பாய் இந்துக் கல்லூரி விரிவுரையாளர் வித்துவான் க. ந. வேலன், யாழ் நகர்க் கல்லூரி பேராசிரியர் வித்துவான் பொன். முத்துக்குமாரன் B.O.L., பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதர் சி. கந்தவனம், திரு. பி. வேலுப்பிள்ளை ஆகிய அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். கடைசி நாளன்று ஊரிக்காடு நடராச இசைக்குழுவினரின் இசைக் கச்சேரி நடைபெறும்.

———

## ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் வெள்ளிவிழா ஞாபகார்த்தச்சபை

ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் வெள்ளிவிழா ஞாபகார்த்த சபையாரால் நிர்வகிக்கப்பட்ட முதியோர் இல்லம் கடந்த 19 வருடங்களாகத் திக்கற்ற எத்தனையோ வயோதிபர்கட்கு மிகவும் சிறந்த முறையில் சேவை செய்து வந்திருக்கின்றதென்பது கண்கூடு. சென்ற ஆண்டு தைத் தடியில் ஒரு வயோதிபர் இல்லம் அரசினரால் திறக்கப்பட்டதிலிருந்து, திக்கற்ற அநாதைக் குழந்தைகளுக்கும் ஒரு விடுதிச்சாலை அத்தியாவசியப தேவையென உணர்ந்து பண்ணையில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் விடுதிச்சாலையை பிள்ளைகள் விடுதிச்சாலையாகத் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது

மேற்படி விடுதிச்சாலையை 1957-ம் ஆண்டு தை மாதம் 31-ந் திகதிக்கு முன் திறக்க வேண்டுமென உத்தேசித்துத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ்விடுதிச் சாலையை திறப்பட நடாத்தவும், சாதி சமய பேதமற்றதாகவும் நடத்தப் பெருநிதி தேவைப்படுகிறது. சென்ற ஆவணிமாதக் கடைசிக்கிழமை தொடக்கம் தர்ம சிந்தையுள்ள பெரியார்கட்குப் பணவுதவி, பொருளுதவி செய்யும்படி விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஒருபிள்ளையை ஒருவருடத்திற்குப் பராமரிக்கச் சகல செலவுகட்கும் ரூபா 460 தேவை. அரசாங்கத்தினால் ஒரு பிள்ளைக்கு ஒருவருடத்திற்கு ரூபா 240 வீதம் அளிக்கப்படுகிறது இத்தொகை போதாது.

இந்தப் புண்ணிய கைங்கரியத்தைத் திறப்பட நடத்துவதற்குத் தர்மசிந்தனையுள்ளவர்களை நன்கொடையாகவும் பிறவாறும் உதவியளிக்குப்படி கேட்கிறோம். இவ்வில்லத்தின் பெயரால் இப்போதிருக்கும் கொடுக்குமதிகளைக் கொடுத்து இந்த அநாதைப்பிள்ளைகள்சாலையைத் திறப்பதற்கு யாவரும் உதவுவார்கள் என நம்பப்படுகின்றது.

அனுப்பும் பணத்தைச் சபைததனாதிகாரியாக இருக்கும் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கும்படி மேற்படி சபைக் காரியதரிசி கேட்டுக்கொள்ளுகின்றார்.

# திருநெல்வேலி சைவ அனுதர்சாலை

## சைவ வித்தியா விருத்திச் சங்கமும் அதன் சேவையும்

### சைவ மக்கள் உதவி புரிந்து வளர்க்கவேண்டிய கடன்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் சைவத்தையும் தமிழையும் வளர்க்கக் கருதிய வழிகளுள் சைவ அனுத சாலையும் ஒன்று. கிறீஸ்தவ பாதிரிமார்கள் தங்கள் மதத்தைப் பரப்புவதிலேயே கண்ணுங் கருத்துமுடையவர்களாய் இருந்து தாய் தந்தையரற்ற பிள்ளைகளைத் தத்மதத்திற்கே சேர்த்து உணவு, உடை ஆதியன கொடுத்துக் கல்வி கற்பித்தார்கள். அவர்களையே தம் மதபோதகர்களாகவும், ஆசிரியர்களாகவும் தம் மதப் பாடசாலைகளுக்கு அனுப்பி வந்தார்கள். அவர்கள் கிறீஸ்தவ ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் மதபோதனையைச் செய்தார்கள். இதனுல் இவர்களுடைய மதம் எங்கும் பரவலாயிற்று. இன்றும் பலர் உத்தியோகத்தின்பொருட்டு மத மாற்றம் செய்து ஆசிரிய கலாசாலைகளிலே பிரவேசிக்கிருர்கள். சைவசமயத்திற் பிறந்தும் தம் வயிற்றுப் பிழைப்புக்காகத் தம் மதத்தை விற்பது எரிவாய் நரகத்தையடையும் வழியாகும்.

இதுநிற்க, நாவலர் பெருமானுக்குப்பின் சைவத் தமிழ் உபாத்திமாரை யாழ்ப்பாணத்திலே தோற்றுவித்த பெருமை காரைநகர் ஸ்ரீ அருணுசலஉபாத்தியாருக்குரியதாகும். இப்பெரியார் இல்லாவிட்டால் சைவத் தமிழாசிரியர்களைக் காணமுடியாது. இவர் ஒரு சைவாசிரிய கலாசாலை நிறுவ எவ்வளவோ பாடுபட்டார். தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தார். ஊண் உடை இன்றி அலைந்து திரிந்தார். கொழும்பு சென்று சேர். பொன் இராமநாதனைச் சந்தித்தார். அச்சந்திப்பின் பேறே கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையாகும். இவரது சைவத் தொண்டை வியந்து பெரியார் திரு. த. கைலாசபிள்ளையவர்கள் நாவலர் அவர்களுக்குப்பின் அருணுசலம் தான் எனக்கூறினர்.

இத்தகைய பெரியாருடைய நட்பைத் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் பெற்ருர். அவர் உபதேசங்களையும் கேட்டார். இதனுல் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் சமயாபிமானங்கொண்டுதொண்டாற்ற முன்வந்தார். சேர். பொன். இராமநாதனும் சைவத் தொண்டாற்ற முற்பட்டனர். இவர்களோடு திரு சு. சிவபாதசுந்தரப் பெரியாரும்சேர்ந்துகொண்டார்கள். இன்னும் பல பெரியார்கள் சேர்ந்து இற்றைக்கு முப்பது வருடங்கட்கு முன் சைவ வித்தியா விருத்திச்சங்கத்தைத் தாபித்தனர். இதன்மூலம் திருநெல்வேலியில் ஒரு சைவாசிரிய கலாசாலையையும், ஒரு சைவ அனுதர் சாலையையும் தாபித்தனர். இதேகாலத்தில் மாதகலிலும் ஒரு ஆசிரியகலாசாலை தாபித்தனர். (அது நன்கொடை பெறுது

ஸ்ரீ செ. கோவிந்தசாமிஅவர்கள்

நின்றுவிட்டது) இதனைச் சிலகாலம் சேர். பொன் இராமநாதன் நடத்திப் பின் திரு. சு. இராசரத்தினத்திடம் ஒப்படைத்தனர்.

இவ்வனுதர்சாலை 1935-ம் 36-ம் ஆண்டுகளில் ஒருகுருகுல வித்தியாலயமாய் விளங்கியது. இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள அனுத ஆண்கள்பலர் வந்து சேர்ந்தனர். அக்காலம் யாமும் சேர்ந்துள்ளோம். இவ்வனுதசாலையின் விடுதி ஒரு ஆச்சிரமம் போன்றது. ஆரம்பத்தில் பெருங் கட்டிடங்களில்லை. சிறு கொட்டில்களேயிருந்தன. இவ்வனுதர்விடுதியை அக்காலம் திரு. சி. முருகேசு உபாத்தியாயர் செவ்வனே நடாத்தினர். விடுதி மாணவர்கள் ஐந்து மணியளவில் நித்திரைவிட்டெழுவார்கள். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வகுப்பறையில் பாட ஆயத்தம் செய்வார்கள். ஏழு மணியளவில் ஸ்நானம செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துப் பிரார்த்தனை மண்டபத்தில் ஆராதனை செய்வார்கள். அதன்பின் சிறிது நேரம்பாடஆயத்தம் செய்து எட்டரை மணிக்கு உணவருந்தி முத்துத்தம்பி வித்தியாசாலைகுப் படிக்கச் செல்வர். பின்பு 2 மணிக்கு வந்ததும் போசன விடுதியில் சாப்பிட்டுக் கொண்டுசிறிதுநேரம் இளைப்பாறுவார்கள். மூன்றரை மணி தொடக்கம் நாலரை மணிவரையும் தேகாப்பியாசம் செய்வார்கள். அதன் பின் மாலையில் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து ஆராதனை மண்டபத்தில் வழிபாடு செய்வார்கள். சமயம் இலக்கியம் முதலிய போதனைகளையும் பெரியோர் மூலம் கேட்பார்கள். இது முடிந்ததும் பாட ஆயத்தஞ் செய்வார்கள். அதன்பின் உணவருந்திப் படுக்கையறை செல்வார்கள். வெள்ளிக் கிழமைகளில் மாலைநேரம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் செல்வார்கள். இத்தகைய சூழலில் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை திரு. பொ. கைலாசபதி போன்ற பெரியோர்களும் ஆச்சிரமக் குடிசை அமைத்து எங்களுடன் வாழ்ந்தார்கள். இவர்கள் வாழ்க்கைப் பண்பாடு எங்களுக்கு ஒரு நல்வழியைக் காட்டுவதாயிற்று. இக்காலத்திற்ருன் சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரனுர் அவர்கள் ஆசிரிய மாணுக்கர்களுக்கு வெள்ளிக்கிழமை தோறும் இரவு நேரத்தில் திருவருட்பயன் சிவப்பிரகாசம் முதலிய நூல்களைப் போதித்தார்கள். இப்படிப் பல பெரியார்கள் வருவதும் போவதுமாய் இருந்தனர். ஆரம்ப காலத்தில் இருந்த கொட்டில்களெல்லாம் பெரும் மாளிகைகளாகிப் பலருக்கு இடவசதி முதலியன அளித்து கல்லூரியாகிப் பலரைப் பயிற்றுகின்றன. இது ஓர் பூங்காவனச் சோலையாகவும் காட்சியளிக்கின்றது. இத்தகைய வித்தியாலயம் பல்லாண்டு சிறப்புற்ரேங்க எம்பெருமான் கேதீஸ்வரநாதர் திருவருள் பாலிப்பாராக. சிவனடியார்கள் இதற்குவேண்டிய உதவி புரிவார்களாக.

# அகத்தியரது தமிழின்ப[...]

## வானரரையே கவரவல்லது

பண்டைத் தமிழைப் பண்போடு வளர்த்த அகத்திய முனிவர் பண்டு வட திசையில் வாழ்ந்தவர். தென்னுடு தமிழ் வழங்கும் தேயமானமையின் அங்கே உள்ளவர்களோடு பழகுமாறு எனக்குத் தமிழ் இலக்கணத்தைக் கற்பித்தருளல் வேண்டும் என்று இவர் தென்நாடு வந்தபொ

திரு. ம. மருதலிங்கம்
சங்கானை

முது சிவபிரானை வேண்டினுர். இந்த உண்மையைப் பழைய திருவிடால் காட்டுன்கிறது.

“ஆதரஞ்சேர் குறுமுனியு மெனை
யொன்ருக்கி
யருள் செய்தா யருள்செய்த
படியே செய்வல்
ஓதருந்தென் பூமிதமிழ்ப்
பூமியென்பா
ரொண்டமிழிற் குரியவெலா
மடிமைக் கிங்கே
போதமுற லறிவித்தல் வேண்டு
மென்று
போற்றுங்கா லெழுத்துச்சொற்
பொருள் முன்னை
நீதியுடைச் சூத்திரங்க ளறியும்
வண்ணம்
நெறியின்க ணறிவித்தாய்
நேசங் கூர்ந்தே”

தமிழ் கற்றதினு லடை[...] பெருமையை நினைந்து நன்றிப் பெருக்கால் இலக்கணம் அறைந்தா[...] இதனுல் அகத்தியன் த[...] தமிழ் என்று ஓர் தெ[...] வழங்கலாயிற்று. இன[...] கம்பர் அழகாக,

“என்றும் உள தென் தமி[...]
இயம்பி இசை கொண்டா[...]”

எனப் போற்றினுர்.

முனிவர் இயற்றிய இ[...]கணம் “அகத்தியம்” அ[...] இயல் இசை, நாடகம் எ[...]னும் முத்தமிழ் இலக்கண[...]களையுமுடையது. அகத்[...]யருடைய தமிழ்ப் பற்றை[...] கம்பன் சுக்கிரீவன் வா[...]லாகக்காட்டுகின்ருர். அ[...]தியர் பொதிய மலையிலே[...]ருந்து தமிழை நெடி[...] வளர்த்து வந்தார். சீ[...]யைத் தேடுதற்குத் தெ[...] திசை செல்லும் வான[...] வீரர்களை நோக்கி வ[...] கூறுஞ்சுக்கிரீவன் “பொ[...]யமலையில் அகத்திய மு[...] வருடைய தமிழ்ச் சங்க[...] இருக்கின்றது. அவ் வ[...] செல்லுவீர்களாயின் தமி[...]ச்சுவையை நீங்கள் நுக[...]

தொடர்ச்சி 4ம் பக்கம்

# திருவெம்பாவைக் காலம்

## மார்கழி மாச வழிபாட்டுச் சிறப்பு

### இலக்கிய இன்பத்துடன் திருவருட்பேறு தரும் சாதனை

உத்தராயணம் தட்சணுயனம் என ஒரு ஆண்டில் இரு அயனங்கள் உள்ளன. தை மாதம் தொடக்கம் ஆனி முடிய உத்தராயணம் இது தேவர்க்குப் பகற் காலம் எனப்படும். ஆடி தொடக்கம் மார்கழி முடிய தட்சணுயனம். இது தேவர்களுக்கு இராக்காலம். இவ்வாறு பகுக்கும்போது மார்கழி மாதம் அவர்களுககு வைகறைப்பொழுதாகும். அக்காலத்தில் நாமும் இறைவனைப் பூசை செய்கிருேம்.

இறைவன் இயற்கையோடியைந்தவன். “இயற்கையே எங்களது ஆசிரியன்” என்று புலவர்கள் கூறுகிருர்கள். “இரவிலே விண் மீன்கள் மின்னிக் கொண்டிருக்கும் நீல வானிலிருக்கும் அமைதி, மலைகளின் மத்தியில்உள்ள அமைதி என்பவை போன்ற எவ்வளவோ இயற்கை எழில்களில் மக்கட்கு அறிவை ஊட்டுகின்றன. புலவரின் உணர்ச்சிகளை வளர்க்கும் தாயாக இயற்கை‘இருந்துவந்திருக்கிருள். இவற்றில் சர்வ வல்லமையுள்ள இறைவன் மறைந்திருப்பதைப் புலவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிருர்கள் என ஆங்கிலக் கவிதைகளைப்பற்றி ஒருவர் குறிப்பிடுகிருர். ஆங்கிலப் புலவர்கள் உணரப் பல ஆண்டுகட்கு முன்னே தமிழர் இந்த உண்மையை நன்கு உணர்ந்துள்ளார்கள்.

கண்டவர்களால் இகழப்படும் காக்கையிலே சிறந்த குணங்கள் உண்டு என ஒரு புலவர் பாடியுள்ளார்.

“காலை எழுந்திருத்தல்,
காணுமலே புணர்தல்
மாலை குளித்து மனைபுகுதல்
— சால
உற்ருரோ டுண்ணல் உறவாடல்
இவ்வாறும்
கற்ருயோ காக்கைக் குணம்”

என்பது அந்தப் பாட்டு. காலையில் எழுந்தால் புத்தி தெளிவடையும் நோய் நீங்கும் என வைத்தியநூல்கள் கூறுகின்றன. இயற்கையின் எழிலைக் காட்டி நாம் சுகமடையவும், இறைவனருளைப் பெறவுங் வைகறையில் துயில் எழுந்து நீராட நம்மை அழைக்கின்றன திருவெம்பாவையும் திருப்பாவையும்.

திருவெம்பாவை மணிவாசகரால் பாடப்பட்டது. திருப்பாவை ஆண்டாளால் [...]

இவ்விரண்டிலும் குறிக்கப்பட்ட கடவுளர் வெவ்வேருயினும் ஒரே கருத்தைச் சிந்தைக் கினிய விருந்தாய் ஊட்டுவனவாயிருக்கின்றன. பெண்களையே நீராட அழைப்பதாக இவ்விரண்டு பாசுரங்களிலும் கூறப்பட்டுள்ளன. மார்கழி மாதம் விசேடமுடைய காலமென்பதை ஆண்டாள் முதற் பாசுரத்திலே கூறிவிடுகிருர். “மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னுளால் நீராடப் போதுவீர் போதுமினே நேரிழையீர்” என்று கூறுகிருர். இவ்வாறு மார்கழி மாதத்தின் கண்ணே வைகறையில் நீராடினுல் நாடு செழிக்கும் என நம்பினுர்கள்.

ஒருத்தி நல்ல துயில் கொள்கிருள். புலரிக்காலமாய்விட்டது.அவள்எழும்பவில்லை; அவளின் தோழிகள் வந்தார்கள். அவளை எழுப்பினுர்கள். அவள் எழும்பவில்லை. உடனே காலையின் இனிய நிகழ்ச்சிகளைக் கூறுகிருர்கள். கோழி கூவிவிட்டது. பட்சிசாலங்கள் இனிய ஓசையை எழுப்புகின்றன. அது மாத்திரமா? கோயிற் சங்குகளும் ஊதுகின்றன. நாம் இறைவன் புகழ் பாடுகி[...]

# திருவெம்பாவைக்காலம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

...ம். இவற்றில் ஒன்றும் ...ர காதில் விழவில்லையா? ...று கேட்கிறார்கள். ...தை மணிவாசகர் நம் ...ன்னே எடுத்துக் காட்டு ...ர்.

"கோழி சிலம்பச் சிலம்புங்
குருகு எங்கும்
...ழியியம்ப இயம்பும் வெண்
சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில்
பரங்கருணை
கேழில் விழுப் பொருள்கள்
பாடினோம் கேட்டிலையோ"

...ன்பன திருவெம்பாவை ...ல் எடுத்துக் காட்டிய வரி ...ள். ஆண்டாளும் காலைக் ...ட்சிகளை எடுத்துக்காட்டி ...ழைக்கிறார். ஆனால் அது ...வறு தொனியில் போகி ...து.

"...சுகீசென் றெங்கு மானைச்
சாத்தன் கலந்து
...சின பேச்சரவம் கேட்டிலை
யோ பேய்ப் பெண்ணே
...சும் பிறப்பும் கலகலப்பக்
கை பேர்த்து
...ச நறுங்குழலாச்சியர்
மத்தினால்
...சைப்படுத்த தயிரரவம்
கேட்டிலையோ"
(ஆனைச்சாத்தான்—கரிக்குருவி)

...னப் பாடுகிறார்.

...மழை பொழிவதை மணி ...ாசகர் வர்ணிக்கிறார். அவ ...ன் பக்தி நிறைந்த ஒழுங் ...ான உள்ளம்போல அவ ...ன் வர்ணனையும் போகி ...றது. சிவபெருமான்மீது ...ாதல் கொண்ட தாருகா ...வனத்துப் பெண்கள் அவ ...ின் உருவெளியையே எங் ...கும் கண்டார்கள். தமை ...ந்தி அன்னம் வர்ணித்த அளவிலே நளனின் உரு வெளித் தோற்றத்தைக் கண்டார் என்று நைடதம் கூறும். அவ்வாறே இராவணன் சீதையைக் கண்டதாக இராமாயணம் கூறும். அதேவிதமாக மணிவாசகரும் ஆண்டாளும் இறைவன் காதலர்களாகையால் அவர்கள் இயற்கைக் காட்சியில் இறைவனைத்தானே காணமுடியும். மேகங்கள் உமையம்மையாரைப் போல் கறுக்கின்றன. அவர் இடையைப்போல் மின்னுகின்றன. அவரின் பாதகமலங்களிலிருக்கும் சிலம்பணியைப்போல முழங்குகின்றன. அவரின் புருவங்கள்போல வானவில் தோன்றி சிவபெருமானது அருளைப்போல் மழைபொழிகின்றது. இக்காட்சியையே மணிவாசகர்

"முன்னிக் கடலைச் சுருக்கி
யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந் தெம்மை
யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம்
பிராட்டி திருவடிமேற்
பொன்னம் சிலம்பிற்
சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை
யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா
னன்பர்க்கு
முன்னிய வணமக்கு
முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய்........."

என்று எடுத்துக் காட்டுகிறார். இக்காட்சியையே மற்றொரு கோணத்திலிருந்து பார்க்கிறார் ஆண்டாள். நாராயணன் முகில்கறுத்து அவர் கையில் உள்ள சக்கரம்போல் மின்னி கையில் உள்ள வலம்புரிச் சங்கைப் போல் முழங்கி சாரங்கமென்னும் வில்லிலிருந்து பெய்யும் அம்பு மழை போன்று யாம் வாழப் பெய்கின்றது அருள் மழை என்கிறார் அவர். இருவர் கருத்தும் இறைவன் அருளாகிய ஒன்றில்தான் கலக்கின்றது. அது ஒரே கடலில் கலக்கும் பல ஆறுகளைப் போன்றது.

சயன அறையில் விளக்கொளியும் சுத்தமான இனிய காற்றும் இருக்க வேண்டும். அவ்வாறே விளக்கெரியவும் இனிய சுகந்தம் வீசவும் ஒருத்தி

**ஸ்ரீ வ. குகசர்மா**

ஆழ்ந்த நித்திரை கொள்கிறாள். அவளின் மைத்துனி வந்து துயிலெழுப்புகிறாள்.

"தூமணி மாடத்துச் சுற்றும்
விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல்
கண் வளரும்
மாமன் மகளே மணிக்கதவம்
தாள் திறவாய்"

என்று அழைக்கிறாள்.

வேறோர் இல்லில் தோழி ஒருத்தி தன் தோழியை துயிலெழுப்புகிறாள். அவளின் தமையனுக்கு எருமை மாடுகள் அதிகம் உண்டு. அந்த எருமைகள் தம் கன்றுகளைப் பிரிந்திருக்கும் நேரங்களிலேமடியிலிருந்து கன்றை நினைத்துப் பால் சொரியும். அந்தப் பால் இல்லத்துள் பாய்ந்து சேறாக்கிவிடும். இக் காட்சியை ஆண்டாள் எடுத்துக் காட்டுகிறார்.

"கனைத்திளங் கற்றெருமை
கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று
பால் சோரா
நனைத்து இல்லம் சேறாக்கும்
நற் செல்வன் தங்காய்"

எனத்தோழியழைக்கிறாள்.

மற்றொருத்தியின் வாசலிலே பல பெண்கள் சென்று சிவபெருமானின் திருநாமங்களை அவள் காதில் விழும்படியாக ஓதுகிறார்கள். ஆனால் அப்பெண் எழும்பவில்லை. எல்லோரும் ஆச்சரியமடைகிறார்கள். இதற்கு முன்போ அப்பெண் இறைவனது திருநாமம் கூறுமுன்பே எரிமுகத்தில் மெழுகென உருகுவாளே. இன்றைக்கு என்ன வந்துவிட்டது என ஆச்சரியமடைகிறார்கள்.

"தென்னா வென்னா முன்னந்
தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய
னின்னமு தென்
றெல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறா
யின்னந் துயிலுதியோ'

என்று கேட்கிறார்கள்.

அவ்வாறு இறைவனைப் பாடினால்நமக்குநல்ல பலன் கிடைக்கும். எங்கள் முற்பிறப்பில் நாம் செய்த வினையும் இப் பிறப்பில் செய்தனவும் இனிமேல் செயப்போகின்றனவும் அழிந்து போம்.

மார்கழியாம்மதிநிறைந்த மாசத்தில் திருவெம்பாவை திருப்பாவைச் செய்யுட்களை ஓதி இலக்கிய இன்பத்துடன் தெய்விக உணர்வும் ஒருங்கே பெற்று ஈடேறுவோமாக.

# நேயர்கள் நெஞ்சம்

**ஆசிரிய அன்ப!**

## நாவலர்வழியில் திருக்கேதீச்சரதர்மம்

சிவனடியார் ஒருவரால் 24—11—56 இந்துசாதனத்தில் திருக்கேதீச்சரக் கோயில் நாவலர் சமய பரிபாலனச் சொத்தெனப் பேசப்பட்டிருக்கிறது. இது சைவ உலகம் ஒப்புக்கொண்ட விஷயமாகும்.

இக்கோயில் நிலத்தைத் தரும்படி சேர் துவையினந்துரை அவர்களை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரையர் கேட்டபொழுது இலவசமாகவே இந்நிலத்தைத் தருகிறேன் எனத் துரை அவருக்கு வாக்களித்தார். நாவலரும் சேர். துவையினந்துரையும் மிக்க சிநேகமுடையவர்கள். இதனைத் துவையினந்துரைக்குக் கீழ் இருந்த சில கததோலிக்க உத்தியோகத்தர் அறிந்து நாவலருக்கும் துவையினந்துரைக்கும் சில மனவிரோதத்தை உண்டுபண்ணிவிட்டார்கள். இதுகாரணமாக கேதீச்சரநிலம் ஏலத்தில் விற்கவேண்டி நேர்ந்தது ஏலவிற்பனவு வருமுன்னே நாவலரையா சிவபதம் அடைந்துவிட்டார்.

இதனைக் கேள்விப்பட்ட துவையினந்துரை மிக மனம் வருந்தி தம் கீழுள்ள உத்தியோகத்தர்களையெல்லாம் "இன்று நீங்கள் கச்சேரிவேலை பார்க்கவேண்டியதில்லை நாவலர் வீட்டுக்குப் போகவேண்டும்" (வண்ணை ஆச்சிரமம்)என்று சொல்லி அவர்களை அனுப்பிவைத்தார். (நாவலர் சரித்திரம் - த-கை 87-ம் பக்கம் 23-ம் 24-ம் வரி) அதுவுமல்லாமல்ஆனைக்கோட்டை மயானத்தில நாவலர்ஐயாவின் திருவுடலை அவர் சீடர்கள் சந்தனக் கட்டையால் தீ மூட்டி எரிக்கும்பொழுது துவையினந்துரையும் மயானம் சென்று பார்த்துக் கண்ணீர்விட்டார். நாவலரின் மூளையும் எரிந்ததோ என்றார். இவ்வளவுக்கு இருவருக்குமிடையி லிருந்த பிணைப்புக் காரணமாகி இறை அருளால் வந்த சொத்துத்தான் திருக்கேதீச்சரம். இதனை நாவலர் சரித்திரம் 86-ம் பக்கம் 10ம் வரியில் "துவைனந்துரையினுடைய உதவியினாலேயே சைவர்களுக்காயிற்று" என்று பேசப்பட்டிருப்பதால் இது நாவலரையாவுக்காக சைவபரிபாலனம் நிகழும் பொருட்டு துவைனம் துரை கொடுத்த பொருளாகும். ஆதலால் இது நாவலர் பெருமானது தருமப் பொருளென்பதைக் கண்டு இதனைப் பரிபாலிப்போர் பயபக்தியுடன் பரிபாலிக்கக் கடவர்.

இங்ஙனம்
**தொண்டன்**

# சைவக் கோயில்களில் தங்கத் தகட்டுக் களவு

இந்தக் கொடுமை உலகில் உண்டோ. மீளா நரகத்திற்குச்செல்லும்அடாத செயலைச் செய்யும் சண்டாளரை, யார்தான் கண்ணால் பார்க்கலாம். இக் கொடிய செயல் இற்றைக்கு இருபது இருபத்தைந்து வருடகாலமாக நடந்து வருகின்றதே. இச்செயல் நின்றபாடில்லையே. எந்தச் சமயத்திலேயாவது, இப்படிப்பட்ட செயலைச் செய்ய இடமுண்டா? சமயம் என்பது கடவுளில் தங்கியிருக்கின்றது. எங்கும் நிறைந்த கடவுளை, பயபக்தியாய் வணங்குவதற்காக, கோயில் கட்டிப் பிரதிஷ்டை செய்யப்படுவது. இப்படிப்பட்ட கோயிலிற் களவெடுப்போருக்கு மீளா நரகமேயன்றி வேறொன்றுண்டோ. இத்தொடர்பில் மகாத்மாகாந்தி பத்திரிகையில் எழுதினர்; "இந்துக் கோயில்களில் உள்ள விக்கிரகங்களைப் பழித்தால், அல்லது நிந்தாட்சணை செய்து புறக்கணித்தால், அந்த நாடு அழியும்" என்று அப்பொழுது கூறினர். இன்று அதுபோல் இலங்கையிலுள்ள சைவ மக்கள் வசிக்கும் இடங்களில், வெயிலின் கொடுமை அதிகம், மழை இல்லை, அகால மழை, சந்ததிவிருத்தி சரியில்லை, இப்படி எல்லாம் ஏற்படுகின்றனவே. மதுரையில, வைகையாறு பெருக்கெடுத்தபோது பாண்டியன் சொன்னது "ஆதியாங் கடவுள் எந்தை ஆலவாயமலன் மங்கை, பாதியான் சிறந்த பூசை பண்டையிற் குறைந்ததுண்டோ, நீதியாந் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேல், தீதுயாம் செய்ததுண்டோ செப்புமின் அமைச்சர்" என்றான். சிறந்த பூசை பண்டையிற் குறைந்ததோவென்று, பாண்டிய இராசன் மனம் நொந்தாரே. தகடு எடுத்துக் கோயிலையும், கடவுளையும், பக்தருடையன மனதையும், ஏளனம் பண்ணுவதால் அவர் குறிப்பிட்ட குற்றம் உண்டாகின்றதல்லவா?

திரு. நா. சேனாதிராசா
யாழ். கமக்காரர்சங்கத் தலைவர்

"ஈன்றாள் பசிகாண்பானாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை" என்றார் திருவள்ளுவர். பெற்ற தாய் பசியிருப்பதைக்கண்டு சகிக்க முடியாதிருந்தாலும் மகன் கூடாத பழியான செயலைச் செய்யக்கூடாது, வறுமையின் நிமித்தமோ, அல்லது சைவசமயத்தை அழிக்கும் நோக்கமாயோ, இப்படியான செயலைச் செய்யக்கூடாது. ஒருசாண் வயிற்றை வளர்ப்பதற்கும், பூவுலகத்தில் கொஞ்சநாள் வாழ்வதற்குமாக, கடவுளை வணங்குவோரின் மனம் புழுங்கும்படி இப்படிச் செய்யலாமா? பௌத்தர்கள் வணங்கும் அரசமரத்தின் ஒரு கொம்பரை, யாரும் வெட்டினால், வெட்டியவரின் கை கீழே விழும், அல்லது உடன் கொலையாகும். இலங்கையிலுள்ள மற்றும் மத, ஸ்தாபனங்களில் ஏதும் இப்படியான அடாத செயல் நடக்கின்றதா? சைவக் கோயில்களில்தானே இப்படியான செயல் நடப்பது; சந்தேகப்பட்ட பேர்வழிகளில், கோயில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். வாளாவிராது கூடிய முயற்சிகள் எடுத்துப் பாதகர்களைச் சட்டமூலமாய்த் தண்டிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், இந்த அடாத செயல் கூடிக்கொண்டே வரும். இலங்கையில் உள்ள ஒவ்வொரு சைவனும், சைவக கோயில்களின் மூலஸ்தானங்களிலுள்ள தங்கத் தகடுகளை இனிமேல் பாதகச் சண்டாளர் எடுக்காமல் செய்தற்கு தம்மாலியன்ற உதவி எல்லாம் செய்யவேண்டும்.

---

## அகத்தியர்தமிழின்பம்

[3 ம் பக்கத் தொடர்ச்சி]

ந்து அவ்வின்பத்தில அயர்ந்து அவ் விடத்திலேயே இருந்துவிடுவீர்கள். அதனால் நீங்கள் செல்லுங் காரியத்தை மறந்து விடுவீர்கள்" என்ற கம்பரது வாக்கிலிருந்து அகத்தியரது தமிழின்பம் வானரவீரர்களது உள்ளத்தையே கவர வல்லது என்றால் அவர் தந்த அகத்தியத்தின் சிறப்பு என்னே!

---

### கலாநிதி அம்பேத்கார் மறைவு

கலாநிதி அம்பேத்கார் திடீரென மறைந்து விட்டார். இந்திய அரசாங்க சபைகளிலும் பிறபலஇடங்களிலும் அவருடைய சேவைக்குப் புகளுரைகள் பல கூறப்பட்டன.

## அறிவித்தல்

சரவணையை சொன்னவூராகக் கொண்டு வேலணையிற் கல்வி பயின்று தமிழ்நொத்தாரிசு பரீட்சையிற் சித்தியடைந்து கடந்த இரண்டரையாண்டுகளாகப் பண்டத்தரிப்பில் கடமையாற்றி வந்தேன். இப்பொழுது காலஞ்சென்ற நொத்தாரிசு க. சு. வீரவாகு அவர்கள் கடமையாற்றிய இடமான வண்ணார்பண்ணையில் கடமையாற்ற பதிவுகாரிய கர்த்தா அவர்கள் அநுமதியளித்திருக்கின்றார்கள். ஆகையினால் 19-12-56 தொடக்கம் தட்டா தெருவுருக்கும் நாச்சிமார் கோவிலுக்கும் இடையில் காங்கேசன் துறை ரோட்டிலுள்ள 570-ம் இலக்க வீட்டை நமது கந்தோராகவும் வாசஸ்தானமாகவும் கொண்டு கடமையாற்ற திருவருளை முன்னித் தீர்மானித்துள்ளேன். தமிழன்பர்களையும் அபிமானிகளையும் எனது கடமையை ஆதரிக்கும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

போ. நா. நடராசா
பிரசித்தநொத்தாரிசு.
பண்டத்தரிப்பு
20-11-56.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திரிக் கோட்டில்
அனலைதீவு சரவணை முத்துக் குமாரவேலு வழக்காளி
எதிராக
இல; M B 743
அனலைதீவு மேற்கு மாதன் முருகன் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 743-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1957-ம்ஞு தை மாசம் 3-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் பதினொரு மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1272–50 சதமும் ரூபா 1000 க்கு 19-1-56 தொடக்கம் 3-5-56 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத தொகைக்கும் இறக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 118–96 சதம்.

### காணிகளின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அனலைதீவுக் கோவிற்பற்று அனலைதீவு இறை ஊரிப்புலமுப் மொண்டி வளவும் பர நில இல இருபத்தாறேகால் (26 1/4) பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு விசுவனுதன் கைம்பெண் நாகமுத்துவுக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம் வடக்கு குமாரசுவாமி சபாபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள் மேற்கு கதிரன் பெண் குழந்தைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு ஒழுங்கை இதடங்கலிற் சொரியலாய் பர நி இலா ஐந்தேகாலும் (5 1/4 அதற்குரியவைகளும்.

2 ஷை இறை ஈழயன் கொட்டல் பர நி இபத்து (10) பனைகளும் எல்லை கிழக்கு ஐயம்பிள்ளை பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் வடக்கு பத்தன் நாகனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் மேற்கு கீழே சொல்லப்படும் 3ம் ஆதனம், தெற்கு சரவணை கைம்பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள இதடங்கலிற் சொரியலாய் ¼ பாகமும் அதற்குரியவைகளும்.

3 ஷை இறை "கொல்லன் கப்மாலை" பர நில இல பதினெட்டே முக்கால் (18 3/4) பனைகளும் எல்லை கிழக்கு மேலே சொல்லப்பட்ட 2-ம ஆதனம் வடக்கு பத்தன் நாகனுக்கும் மறுபேருக்கு முரிய ஆதனங்கள் மேற்கு வயித்தி பெண் சின்னவளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் தெற்கு சரவணை கைம்பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலிற் சொரியலாய் 1/5 பாகமும் அதற்குரியவைகளும்.

1956 ம்ஞு கார்த்திகை மீ 5 உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
காரைநகர்
M 430 14-12-56. (து 300)

## தெல்லிப்பழை கிழக்கு சைவப் பிரகாச வித்தியாசாலை

### சமயாபிவிருத்திச் சங்கம்

கார்த்திகை 14-ந் திகதி (29-11-56) வியாழக்கிழமை ஷை வித்தியாசாலை மண்டபத்தில் பண்டிதர் திரு. சி. செல்லத்துரை அவர்கள் தலைமையில் ஷை சங்கம் ஆரம்பமாயது. தலைவர் அவர்கள் முன்னுரை நிகழ்த்தியபின் ஆறுமுகநாவலர் என்னும் விஷயம் பற்றி நாவலர் பேச்சுப் போட்டியில் திறமைபெற்ற மாணவர் மூவரும் பேச்சு நிகழ்த்தினர். மாவிட்டபுரம் கிராம விதானையார் திரு. இ. துரைசுவாமி அவர்களும் பாடசாலை ஆசிரியர்களும் பரிசில்கள் வழங்கினர்.

பின்பு தென்மயிலை சைவத்திருவாளர் செ. கோவிந்தசாமி அவர்கள் நாவலரும் சைவமும் என்னும் விடயம்பற்றிப் பேசும்போது திருநெல்வேலி ஞானப்பிரகாசர் மடத்தின் தாய்மையையும் நாவலர் சைவம் வளர்த்த முறையையும் குறிப்பிட்டு இப்பொழுது நடைபெறும் சிவத்துரோகங்களைக் கண்டித்தார். பின்னர் மாணவிகள் பண்பாடுதல் நன்றியுரை என்பவற்றுடன் கூட்டம் இனிதுநிறைவேறியது.

## சிங்கள "ஸ்ரீ" எதிர்ப்பு

யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த அகில இலங்கை வாலிபர் முன்னணிக் கூட்டமொன்றிலே உந்து வண்டிகளில் சிங்கள "ஸ்ரீ" எழுத்து இடுவதை யாவரும் எதிர்க்கவேண்டுமென்னும் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பெற்றது.

இக்கூட்டத்தில் எல்லா அரசியற் கட்சிப் பிரதிநிதிகளும் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சேர். ஜோன் ஓய்வு

சேர். ஜோன். கொத்தலாவல அரசியலிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளாராம். ஸ்ரீ டட்லி சேனநாயக அரசியலில் மீண்டும் ஈடுபடப்போகின்றார் என்பதும் இத்தொடர்பிற் குறிப்பிடப்படுகின்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தெல்லிப்பளை தென்மேற்கு பொன்னம்பலம் வயித்திலிங்கம் வழக்காளி.
இல, M B 725
எதிராக
கோப்பாய் இருபாலை இரத்தினசிங்கம் தம்பி
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 725ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகள் 1956ஞு தை மீ 26 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2120/- ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் ரூபா 2000 க்கு 12 விதவட்டி 29-12-55 தொடக்கம் 3-5-56 வரைக்கும் அதன்மேல் முழுத்தொகைக்கும் 3–5–56 தொடக்கம் இறக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 185–17.

காணிகள் விபரம்:

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குளி கோயிற்பற்று மறுவன்புலோ இறை குளைப்பிட்டி பர. நெ. இலா 20. எல்லை கிழக்கு கோயில் நிலம். வடக்கு சேதுகாவலர் பிள்ளையார்கோவில் நிலம் மேற்கு ஒழுங்கை தெற்கு வாய்க்கால். இதடங்கலும் இது F 287/47 பதியப்பட்டிருக்கிறது.

(2) ஷை இறை அம்மைபவயல் அல்லது மறுவன்புலோ வயல் பர. நெ இல 30 எல்லை கிழக்கும் வடக்கும்தெற்கும் சங்கரப்பிள்ளை கைம்பெண் செல்வநாயகிப்பிள்ளையுடைய உருத்தாளரின் ஆதனங்கள். மேற்கு காசிநாதர் அம்பிகைபாகரின் உரித்தாளரின் ஆதனம். இதடங்கலும் இது 287 48 பதியப்பட்டிருக்கிறது.

(3) ஷை இறை பூன்கடி வயல் பர. நெ இலா, 10 எல்லைகிழக்கு காசிநாதர் அம்பிகாபரின் உருத்தாளரின் ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு பொன்னம்பலமும் சகோதரர்களும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு சேதுகாலப்பிள்ளையார்கோவில் காணி. இதடங்கலும் இது F 291/198 பதியப்பட்டிருக்கிறது.

சே. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
51, 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம், 11-12-56.
M 424 14-12-56 (து 300)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டில்
1. காரைநகர் தற்போது மலாயாவில் வசிக்கும் கந் தப்பு அம்பலவாணரும் பெண்
2. காரைநகர் வடக்கு அன்னம்மா
— வழக்காளிகள்
இல. M B 931
எதிராக
காரைநகர்கிழக்கு தில்லையம்பலம் கந்தையா எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 931ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகள் 1957ம் ஞு தைமீ 5ம் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் முதலாம் காணியும் பதினொரு மணி தொடக்கம் இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-- முதல் வட்டி ரூபா 2038/ம் ரூபா 1500/- க்கு 25-4-1956 தொடக்கம் 21-8-1956 வரை 6 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 191-20 சதம்.

## வாழ்க்கையின் நோக்கம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஆன்ம சக்தியையும் அருளையும் ஒளியையும் வெளிப்படுத்தும் பொழுது தனது உண்மைத்தன்மையை அடைந்து என்றும் நீங்காத பேரின்பத்தையடைகின்றது. அப்பொழுது ஓர் உயிரானது தானே ஒளிர்ந்து மற்றவர்களுக்கும் ஒளியாகின்றது. இத்தகைய ஒளி உலகெங்கும் பரவி அன்பும் சமாதானமும் நிலவுவதாக.

—சுவாமி இராதாசர் அவர்களின் கட்டுரையைத் தழுவியது.

### காணிகளின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று வலந்தலையிறை "வேலிவந்தான்" பர. நெ இல. ஐந்து (5) எல்லை கிழக்கு சுப்பிரமணியம் பெண் செல்லமுத்துவிற்குரியவாதனம். வடக்கு சண்முகப் தில்லையம்பலத்திற்குரியவாதனம். மேற்கு குமாரவேலு சங்கரப்பிள்ளைக்கும் சரவணமுத்து கைம்பெண் வள்ளியம்மைக்குமுரிய வாதனங்கள். தெற்கு பொன்னம்பலம் வேலுப்பிள்ளைக்குரிய வாதனம். இதடங்கலும்,

(2) ஷை வலந்தலை களபூமியிறை "யாததரவை" பர. நி இல அறுபத்தொன்பது (69) பனைகள் வடலிகளும் எல்லைகிழக்கும் வடக்கும் கடற்கரை மேற்கு பொன்னையா கைம்பெண் தங்கமுத்துவிற்கும் பங்காளருக்குமுரியவாதனம். தெற்கு முடிக்குரிய நிலம். இதடங்கலிற் சொரியலாயவரைவாசி.

1956-ம்ஞு கார்த்திகைமீ 12ம் உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
காரைநகர்,
M 431 14-12-56(து. 300)

# உங்கள் நக்ஷத்திரம்?

**எங்கள் சோதிடம்**

ஸ்ரீ ராகா சிருஷ் ஆன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 16—12—56 —— 22—12—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை மூதற்கால்.

உம்முடைய சொந்தச் சிக்கல்கள் சில நீக்கப்படும். ஆயினும் மனச் சமாதான மிருக்கமாட்டாது உம்முடைய எல்லா முயற்சிகளிலும் கவனமாயிருக்கவும். மேலதிகாரிகளுடன் சண்டைகளுக்கிடமுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

ஒரு தளப்பமானவாரம். மனச்சமாதானமிருக்கமாட்டாது. கந்தோரில் தொந்தரவுகளுக்கிடமுண்டு. தேகசுகமும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. ஆனால் குடும்பத் தொந்தரவுகள் குறையும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

வழக்கத்திலும் பார்க்க வேலை இந்த வாரம் கூடுதலாயிருக்கும். நண்பர் — விசேடமாகப் பெண்ணின நண்பர் உம்மை அதிகம் வருத்துவார்கள். காணிகள் காணிப்பொருள்களமூலம் இலாபங்கள் நிச்சயம்

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

நீர் முன்னிடவேண்டியஇடைஞ்சல்களுட் சில நீக்கக்கூடியதாயிருக்கும். புகழும் தனலாபமும் நிச்சயம். ஆனால் வார இறுதியில் இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

சுகவீனங்களுக் கிடமுண்டு. நண்பருடன் சண்டைகளுக்குமிடமுண்டு. நீர் வாகனம் எதுவாயினும் வைத்திருந்தால் அபாயங்கள்பற்றி எச்சரிக்கையா யிருக்கவும் ஆனால் பெரிய ஆபத்தொன்றும் வரமாட்டாது.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

புதுக் கருமங்களுக்கு நல்லவாரம். உம்முடைய சில சொந்தச் சிக்கல்கள் நீக்கப்படும். தனலாபமும் நிச்சயம். வார இறுதியில் இனத்தவர்களுடன் சண்டைகளைத் தவிர்க்கவும்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

பண நெருக்கடி இந்தவாரம் குறையும். புது முயற்சிகள் சில இலாபங்களைத் தரும். வழக்கத்திலும் பார்க்கப் பொறுப்புகள் கூடுதலாயிருக்கும். ஆனால் தகுந்த அளவுக்குப் பதிலுபகாரம் பெறுவீர். முதல் இரு நாட்களையும் கவனமாய்க் கழிக்கவும்.

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அனுஷம், கேட்டை.

தேகசுகம் சிறிது திருந்தும். ஆனால் குடும்பக் கருமங்கள் தொடர்ந்து சிக்கலாயிருக்கும் பணத் துறையில் நல்ல வாரம். நண்பர் அதிக உதவியாயிருப்பார். செவ்வாயும் புதனும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

உம்முடைய குடும்பக் கருமங்களில் இந்தவாரம் சில மாற்றங்களுக்கிடமுண்டு. தேகசுகம்விசேட கவனம் கொடுக்கப்படவேண்டும். புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்படுதல்வேண்டும். வியாழனும் வெள்ளியும்சண்டைகளைத் தவிர்த்து அபாயங்கள்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

கடைசி நாள்தவிர இந்தவாரம் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். ஆனால் வழக்கத்திலும் பார்க்கச் செலவு அதிகமாயிருக்கும் கடைசி நாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

நீர் இந்த வாரம் சில புது நண்பரைப்பெறுவீர். தனலாபமும் புகழும் நிச்சயம். உம்முடைய திட்டத்தை முன்னேற்றுக. நீர் நிச்சயமாய்ச் சித்தியடைவீர்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

நீர் கூடுதலான நன்மதிப்பைப் பெறுவீர். தனலாபங்களும் நண்பர் உதவியும் நிச்சயம். அணிமையில் ஓர் உயர்வுண்டாதற்குச் சில வசதிகளிருக்கின்றன.

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் 42, K. K. S. ரோட் வீரகத்திப்பிள்ளை இராசசேகரம் அவர்களின் அடைவு கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி மீட்கப்படாதிருக்கும் இதன்கீழ் விபரிக்கப்படும் நகைகள் 1957-ம் ஆண்டு தை மாசம் 3 உ க்குச்சரியான துர்முகி ஹூ மார்கழி மீ௳ 20 உ வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் வெந்தீசில் விற்கப்படும்.

| நம்பர் | ஹூ | மீ௳ | உ | ரூ. | ச. | பெயர் | விலாசம் | பொருள் விபரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| K 4226 | 1952 | ஆனி | 12 | 30 | 00 | க. சின்னையா | கோண்டாவில் East | கல் கடுக்கன் ஒன்று மேற்பிடி மோதிரம் ஒன்று |
| 5581 | ,, | ஐப்பசி | 16 | 35 | 00 | குமாரசாமி சோமசுரந்தரம் | கோப்பாய் | கொண்டைப்பூ ஒன்று |
| 5809 | ,, | கார்த்திகை | 3 | 40 | 00 | தில்லைநாதர் ஆறுமுகம் | சிறுப்பிட்டி | புரூச் ஒன்று |
| 6344 | ,, | மார்கழி | 15 | 90 | 00 | சுப்பிரமண்யம் கந்தசாமி | பருத்தித்துறை | மிளகு காப்பு சோடி ஒன்று |
| 9463 | 1953 | ஆவணி | 28 | 35 | 00 | கந்தையா தங்கவேல் | 73, 5ம் குறுக்குத்தெரு கொழும்பு | மோதிரம் ஒன்று |
| L 1662 | ,, | மார்கழி | 8 | 60 | 00 | கந்தன் குட்டி | கோண்டாவில் West | சங்கிலி ஒன்று அரைப் பவுண் உட்பட |
| 2048 | ,, | ,, | 24 | 70 | 00 | முத்துக்குமாரு சண்முகம் | புத்தூர் | நெளிக்காப்பு சோடி ஒன்று |
| 2442 | 1954 | தை | 15 | 115 | 00 | யோசேப்புபாக்கியநாதன் | கோப்பாய்வடக்கு | அச்சுக்காப்பு ஒன்று |
| 2640 | ,, | ,, | 28 | 800 | 00 | சி. ஆனந்த மயில் | வல்வெட்டித்துறை | ஒட்டியாணம் ஒன்று |
| 2889 | ,, | மாசி | 26 | 15 | 00 | S. A. குமாரசாமி | No. 8 Stanley Rd | மோதிரம் ஒன்று |
| 3354 | ,, | வைகாசி | 25 | 40 | 00 | பொன்னையா இராமலிங்கம் | நீராவியடி | புரூச் ஒன்று |
| 5435 | ,, | ஐப்பசி | 11 | 100 | 00 | ஆறுமுகம் நவரத்தினம் | நாவற்குளி | மார்பதக்கம் ஒன்று |
| 6277 | ,, | கார்த்திகை | 20 | 60 | 00 | சின்னத்தம்பி மயில்வாகனம் | சுண்டிக்குளி கச்சேரி கிழக்கு ஒழுங்கை | சங்கிலி ஒன்று |

1957ம் ஆண்டு தை மாசம் 3 உ க்குச் சரியான துர்முகி ஹூ மார்கழி மீ௳ 20 உ வியாழக்கிழமை காலை 10 மணியளவில் ஷை யார் கடையில் எடுபட்ட நகைகள் புறநீங்கலாக மீதி என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

S. Pasupathy Chettiar
Auctioneer

[M 423 7, 14-12-56]




## சிவகைங்கரியமே சிந்தையிற் கொண்டு சிவனை நம்பியே……

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூடப் பெண்களை நினையாமல் காமத்தை யெல்லாம் சிவகாமமாக்கினர். வயிற்குரிய ஆசாபாசங்களையெல்லாம் சைவ நேசமாக்கினர் ஒரு நொடி கூடப் புறஞ்சொல்லாமல் உடல், உயிர் எல்லாம் தமிழுக்கும் சைவ சமயத்துக்குமாகத் தியாகம் செய்தார்.

பாதிரிமார் பாடசாலைகளில் சைவப்பிள்ளைகள் படிக்க இடர்ப்பட்டதை யுணர்ந்தார். அவருடைய மனச்சாட்சியில் "உனது நாட்டில் அந்நிய நாட்டவர்கள் வந்து தமது சமயத்துக்குச் செய்யும் பணியைப் பார்! உன்னவரையும் பார்! தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் நீயும் இத்தகைய பணியைச் செய்! பாதிரிமார் பள்ளிக்கூடத்தில் சைவப்பிள்ளைகளின் இடர்களைப் பார்" என்று தோன்றியது. ஆகையால் நாவலர் அன்றே பின்வரும் மூன்று உறுதிகளையும் பூண்டார்.

1 சிவ நெறியில் பயில வித்தியாசாலைகள் அமைத்தல்.

2 ஓர் அச்சுப் பொறி வைத்து நல்ல நூல்களை அச்சிட்டு வழங்குதல்.

3 சைவசமயப் பிரசாரகரை உருவாக்குதல்.

இந்நோக்கங்களை நிறைவேற்ற நீலக வருடம் ஆவணி மாதம் ஐந்தாந் தேதியிலே ஒரு வித்தியாலயம் ஸ்தாபித்தார். அப்பாடசாலையை நடத்த முதலில் மிகுந்த கஷ்டப்பட்டார். பணக்காரரைக் கெஞ்சவில்லை, பணவுதவி கேட்கவில்லை, பிடியரிசி தண்டினர். "தமிழுக்காக, சைவசமயத்திற்காக அரிசி களையும்போது ஒரு பிடி போடுங்கள்" என்றார். அதைவிற்றுப் பாடசாலையை நடாத்தினர். பின்னர் 1848-ம் ஆண்டு புரட்டாதி (செப்டம்பர்) மாதம் பாதிரியார் பாடசாலையைவிட்டு தம் சமயப் பிள்ளைகட்குப் படிப்பிக்கும் பொறுப்பைத் தாமே ஏற்று நடாத்தி வந்தார். சிவகைங்கரியமே என் வேலையென உறுதி கொண்டார். இதனைக்கேள்வியுற்ற தமையன்மார் "நீ என்ன புத்தியீனஞ் செய்தாய், இந்தச் சம்பளம் நீ இனி எங்கே பெறுவாய்" என்று கண்டித்தனர். அதற்கு "நான் உங்களிடம் வந்து பொருள் கேட்காதிருக்கப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று அவர் மறுமொழி கூறி அவர் வாயை அடகிவிட்டுத் தம் சமயப் பணியை வளர்த்து வந்தார்.

அன்றுமுதல் வீட்டைக் கூட மறந்து தமது சீவன விரதமான சைவ சமயத் தொண்டிலே ஈடுபட்டார். பரம்பொருளான சிவனை நம்பி, சைவசீலம் பூண்டு தமது கடமைகளைச்செய்து வந்தார். பாடசாலை வளர்ந்து வந்தது. பிள்ளைகள் தொகை அதிகரித்தது. பின்னர் சேர்ந்த பணத்தைக்கொண்டு வித்தியாசாலை தாபிப்பதற்கு நிலம் வாங்கினர். அதன் வளர்ச்சியும் அவர் மனத்தை மகிழச்செய்தது.

அத்துடன் நில்லாது ஒவ்வொரு வெள்ளி தோறும் சமயப் பிரசங்கங்கள் செய்து வந்தார். யாழ்ப்பாணத்துச் சமயநிலையை எடுத்து விளக்கினர். அதில் நீங்கள் உங்கள் சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும் உங்கள் இலக்கணங்களையும் ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும் சிவபெருமானை வழிடும் முறைகளையும், அதனுலே வரும் முத்தியின் இலக்கணங்களையும் கிரமமாய்ப் படித்தாயினும் கேட்டாயினும் அறியவேண்டும். உங்கள் பிள்ளைகட்கு இவைகளைப் படிப்பிக்க வேண்டும். உங்கள் கோயில்களிலே சிவபக்தியை வளர்த்தற்கு வேண்டிய வேத பாராயணம், தேவார திருவாசக பாராயணம், முதலிய நற்கருமங்களைச் செய்விக்கவேண்டும். கோயில்களைப் புதுக்குவித்துப் பூசை முதலியன கிரமமாகச் செய்யவேண்டும் என்றெல்லாம் எடுத்துக் கூறி விளக்கினர்.

இன்னும் சைவ சமயத்துக்கு விரோதமான மதுபானம், மாமிச போசனம் முதலிய தீமைகள் தலைப்படாவண்ணம் விலக்குங்கள். நீங்கள் வருந்தித் தேடிய பணத்தைக் கல்விப் பணி, சமயப்பணி முதலிய நற்கருமங்களிற் செலவிடுங்கள். கோயில்களிலே வீண் வேடிக்கைகள் செய்வதை நிறுத்துங்கள். கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்களையே குருமாராகக் கொள்ளுங்கள் என எடுத்துக்காட்டித் தமது சமயப் பணியைத் தொடர்ந்து ஆற்றி வந்தார்.

(வளரும்)

யாழ்ப்பாணம்
### ஐக்கிய இலாபநிதி
1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாறுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றததக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்

Std 14

உ
வெளிவந்துவிட்டது
### தஞ்சைவாணன் கோவை
சொக்கப்பநாவலர் உரை
( இரண்டாம் பதிப்பு )
வித்துவான் ந சுப்பையபிள்ளை
அவர்களால்
திருத்திப் புதுக்கி அமைக்கப்பெற்றது.
அதிபர் சைவப்பிரகாச யந்திரசாலையிடம் பெற்றுக்கொள்ளலாம்.
விலை ரூபா: 6-00

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
சோன்முறை யாசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 14 12 56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.